**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு (குறள்.எண்.595)**

**பொருள்:** உயர்வானவற்றையே எண்ண வேண்டும் அவை தவறினும் அவ்வெண்ணம் கைவிடல் ஆகாது.

<u>பழனி நகராட்சி</u>

**2018–ம்** ஆண்டு பிப்ரவரி மாதம் **12–02–2018–ம்** நாள் திங்கட்கிழமை காலை **10.30** மணியளவில் பழனி நகராட்சியில் அவசரக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

| | |
|---|---|
| நகராட்சி அலுவலகம், பழனி | தனி அலுவலர் |
| நாள். 12 –02–2018 | பழனி நகராட்சி |

<u>கூட்டப்பொருள்</u>

**1.** பழனி நகராட்சிப் பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தேபொ1, நாள். 19–10–2017 , 07–12–2017 மற்றும் 13–12–2017 ஆகிய கடிதங்களில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின் படி வரைவு மறுவரையறை கருத்துக்கள் படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண்.328 நாள். 15–12–2017–ல் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. வரைவு மறுவரையறை உத்தேசங்கள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி வரைவு மறுவரையறை உத்தேசங்கள் தொடர்பாக கடந்த 12–01–2018–ம் தேதி வரை ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 80 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான மண்டல வாரியான ஆய்வுக்கூட்டம் மதுரையில் 06–02–2018 அன்று நடைபெற்றது. பெறப்பட்ட ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளில் 5 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 75 மனுக்கள் கோரிக்கைகள் அரசு வழிகாட்டுதலுக்கு முரணாக இருந்ததால் நிராகரிக்கப்பட்டது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட உத்தேசங்கள் உறுப்பினர் செயலர் மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள். 31–01–2018–ம் தேதிய கடிதத்தின் படி உரிய வழிகாட்டுதலின் படி தயார் செய்யப்பட்டுள்ளது. பழனி நகராட்சியின் 33 வார்டுகளுக்கான மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு மாநில மறு வரையறை ஆணையத்திற்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: ஒப்புதல் அளிக்கலாம். **(ந.க.எண். 3819/2017/சி3)**

| | |
|---|---|
| நகராட்சி அலுவலகம், பழனி | தனி அலுவலர் |
| நாள். 12 –02–2018 | பழனி நகராட்சி |